# R 721 (page 2)

## நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து

## CHRIST OUR PASSOVER.

"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே, ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்."1 கொரிந்தியர் 5:7, 8

யூதர்களுடைய ஏழு நாட்களுள்ள பஸ்கா பண்டிகையானது இந்த வருடத்தில் (1885-இல்) மார்ச் 31-ஆம் தேதி துவங்கி, ஏப்ரல் 7-ஆம் தேதி முடிவடைகின்றது மற்றும் இது அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியைப் புசிக்கின்றவர்களுக்கு வரும் பூரணமும், நித்தியமுமான தூய்மைக்கும், சந்தோஷத்திற்குமான நிழலாய் இருக்கின்றது. நமது பஸ்கா (ஆட்டுக்குட்டியாகிய) கிறிஸ்து அடிக்கப்பட்டுள்ளபடியினால், நாம் அனைவரும் அவரால் உண்டான புண்ணியத்தில் விசுவாசத்தினால் பங்கெடுத்துள்ளபடியால், நாம் தேவனுக்கு முன்பு தொடர்ந்து களிகூரவும், சத்தியத்தைப் புசிக்கவும், சகல பாவமாகிய புளிப்பை, அதாவது துர்க்குணம், மாய்மாலம் முதலியவைகளை முற்றிலுமாகக் களைந்துபோடத்தக்கதாக பவுல் போதிக்கின்றார்.

பஸ்கா ஆட்டுக்குட்டியின் மரணமும் மற்றும் அதைப் புசித்தலும்தான், இஸ்ரயேலர்களுக்கு ஒருவாரமளவும் நீடிக்கக்கூடிய "பஸ்கா பண்டிகைக்கான" காரணமாக அல்லது அடிப்படையாகக் காணப்பட்டது. பண்டிகை வாரத்திற்குரிய முந்தின நாளில், ஆட்டுக்குட்டியானது அடிக்கப்படுகின்றது மற்றும் இது இயேசுவினுடைய மரணத்திற்கு நிழலாய் இருக்கின்றது. ஆகையால் சிலுவை மரணநாளுக்கான ஆண்டு நிறைவு நாளானது இந்த வருடத்தில், மார்ச் மாதம் 30-ஆம் தேதியன்று (யூத நேரத்தின்படி) மதியம் முதல் பிற்பகல் 3 மணிக்குள்ளாக வருகின்றதாக இருக்கின்றது மற்றும் இதற்கு முந்தின சாயங்காலம் (இதுவும் யூத நேரத்தின்படி அதே நாளாக இருக்கின்றது; ஏனெனில் அவர்களுக்கு நாளானது சாயங்காலம் 6 மணிக்குத் துவங்குகின்றதாய் இருக்கின்றது) அதாவது மார்ச் 29-ஆம் தேதியாகிய ஞாயிற்றுக்கிழமையன்று சாயங்காலத்தில், 6 மணிமுதல் 10 மணிவரை ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதற்கும், பஸ்கா போஜனத்தை ஆயத்தம் பண்ணுவதற்கும் மற்றும் புசிப்பதற்கும் செலவிடப்படுகின்றது மற்றும் இதற்குப் பின்னர், நமக்காகப் பிட்கப்பட்டு, சிந்தப்படப்போகின்ற நமது கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்தும் அப்பம் மற்றும் திராட்சரசம் அடங்கின இராப்போஜனமானது, சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியின் இடத்தில் இனிமேல் இடம்பெறப்போவதாக அவரால் தம்முடைய சீஷர்களுக்கு அறிமுகம்பண்ணப்பட்டது; இந்தச் சின்னங்கள் (அப்பம், இரசம்) "நிஜமாகிய அவரை — உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியை" அடையாளப்படுத்துகின்றதாய் இருந்தது.

தம்முடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்குமான அடையாளச் சின்னங்களாகிய அப்பத்தையும், திராட்சரசத்தையும் சீஷர்களுக்குக்கொடுத்து, "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று கூறி, அதைப் புசிக்கும்படிக்குக் கர்த்தர் கூறினபோது, அதுமுதல் பஸ்காவின் ஆண்டு நிறைவு நாளானது, நிழலான ஆட்டுக்குட்டியைப் புசிப்பதன் வாயிலாக நினைவுகூரப்படாமல், மாறாக நிஜமான ஆட்டுக்குட்டியின் இந்தச் சின்னங்களைப் புசிப்பதன் மூலம் நினைவுகூரப்பட வேண்டுமென்று கர்த்தர் போதித்ததாக நாம் புரிந்துகொள்கின்றோம். (லூக்கா 22:19) எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டதை நினைவுகூருவதற்காக இல்லாமல், மாறாக பாவம் மற்றும் மரணத்திலிருந்ததான நம்முடைய விடுதலைப்பற்றி நினைவுகூருவதற்காகவே ஆகும். நிஜமானது ஆரம்பித்துவிட்டதென எல்லாவிதத்திலும் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும்.

அப்போஸ்தலன், "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப்புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடையமரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:26) என்று கூறும்போது, இந்த ஆண்டு நிறைவு நாளானது (ஆண்டுதோறும் அந்நாளில்) ஆசரிக்கப்படும்போதெல்லாம், நாம் கர்த்தருடைய மரணமே நம்முடைய சந்தோஷம், பரிசுத்தம் மற்றும் நம்பிக்கை அனைத்திற்குமான அடிப்படையாக இருக்கின்றது என்பதைத் தெரிவிக்கின்றவர்களாய் இருப்போம் என்று அப்போஸ்தலன் போதிப்பதாகவே நாம் புரிந்துகொள்கின்றோம். "கர்த்தர் வருமளவும்" எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை, நம்மை வரையறுக்கும் விதத்திலும் மற்றும் நம்முடைய தற்போதைய ஆசரிப்பு சரியற்றது எனும் விதத்திலும் நாம் புரிந்துகொள்வதில்லை; ஏனெனில் அவ்வார்த்தைகளுக்கான திட்டவட்டமான அர்த்தமானது — கர்த்தருடைய இராஜ்யம் வந்திருந்து, அந்த இராஜ்யத்தில் அவர் தம்மோடுகூட நீங்கள் (திவ்விய

சுபாவத்தின் உரிமைகள், சிலாக்கியங்கள் மற்றும் சந்தோஷங்கள் எனும்) நவமான இரசத்தைப் பருகும்படிக்கு அழைப்பதுவரையாகும். மாற்கு 14:25; லூக்கா 22:16-ஆம் வசனங்களைப்பார்க்கவும்.

நம்முடைய புதிய வாசகர்கள் அநேகரின் நலன் கருதி, நாம் குறிப்பிடுவது என்னவெனில், சில வருடங்களாக "இதை," ஆண்டுதோறும் அதன் ஆண்டு நிறைவு நாளில் ஆசரிப்பது நம்முடைய வழக்கமாக இருந்துவருகின்றது; அதுவும் கூடுமானவரை, நமது கர்த்தரால் இது நிறுவப்பட்ட முதற்தருணத்தின்போதும் மற்றும் ஆதித் திருச்சபையாரிடத்திலும் விளங்கின எளிமையானது பேணப்பட்டும் வருகின்றது. இந்நகரத்தில் இருக்கும் சபையார் வழக்கம்போல், அலிகெனி நகரத்திலுள்ள, பிரடரல் தெருவில், எண்: 101-இல் உள்ள "மேற்வீட்டறையில்" கூடிக்கொள்வார்கள். கர்த்தருடைய சீஷர்களாய் இருப்பவர்கள் அனைவரையும் — பிட்கப்பட்டச் சரீரத்தையும், சிந்தப்பட்ட இரத்தத்தையும் மதிக்கும் அனைவரையும், நமக்கான மீட்கும்பொருளை ஒன்றாய்ச்சேர்ந்து நினைவுகூரும்படி எங்களோடு கூடும்படிக்கு வரவேற்கின்றோம்.

நம் அனைவராலும் இங்குக் கூடிடமுடியாது, ஆனால் நம் அனைவராலும் நமது கர்த்தருடன் கூடிடமுடியும் மற்றும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்று உணர்ந்துகொள்கையில் நமது தலையானவருடனும், நமது பிதாவுடனும், ஒருவரோடொருவரும், இருதயத்தினுடைய ஐக்கியத்தில், ஐக்கியம்கொள்கின்றோம். எங்கே இயேசுவின் நாமத்தில் இரண்டு அல்லது மூன்றுபேர் கூடிக்கொள்கின்றார்களோ, அங்குத் தலையானவர் காணப்படுவார் மற்றும் அதன் காரணமாக ஆசீர்வாதமும் கடந்துவரும்.

நமது கர்த்தருடைய சரீரத்தை அடையாளப்படுத்தும் அப்பத்தைப் பிட்கையில், அவருடைய நியமித்தலினாலேயே நாம் இப்பொழுது அவரது சரீரத்தின் அங்கத்தினர்களாகக் காணப்படுகின்றோம் மற்றும் அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்களெனப் பிட்கப்படவும் போகின்றோமென்பதை நாம் மறந்துவிட வேண்டாம். நாம் நீதிமானாக்கப்படுவதற்குக் காரணமான அவரது பலியாக்கப்பட்ட ஜீவனுக்கான சின்னத்தை நாம் பருகுகையில், நாமும் அவருடைய பாத்திரத்தில் பங்கடைவதற்கும் மற்றும் இப்படியாக அவரது மரணத்தின் அடையாளத்தில் பங்குகொள்வதற்கும் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம். அவருடைய கிருபையினால், நாம் அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணி, பின்னர் அவரது மகிமையில் பங்குகொள்வோம். (மத்தேயு 20:22, 23)

இதையே அப்போஸ்தலர் 1 கொரிந்தியர் 10:16-18 வரையிலான வசனங்களில் குறிப்பிடுகின்றார். பலிகளைப் புசித்த அந்த ஆசாரியர்கள், அந்தப் பலிகளைச் செலுத்தினவர்களாகவும், அந்தப் பலியினால் அடையாளப்படுத்தப் படுகின்றவர்களாகவும் காணப்பட்டனர். "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்." (1 கொரிந்தியர் 10:16, 17 திருவிவிலியம்) கவனமற்ற விதத்தில் எவரும் இந்த அடையாளங்களில் பங்குகொள்ளாமல், மாறாக ஜாக்கிரதையுள்ள மற்றும் உண்மையுள்ள இருதயங்களுடனும் ஒவ்வொருவனும் இயேசுவினுடைய பலியின் விளைவாகவரும் பலன்களிலுள்ள தனக்கான பங்கினை மாத்திரமல்லாமல், இயேசுவினுடைய பலியின் விளைவாக பின்பு தனக்கு இயேசுவோடு பலியிலிருக்கும் பங்கினையும் உணர்ந்துகொள்வதற்கு முயற்சிப்பானாக.

------------------------